(9) 1971–72-ஆம் ஆண்டு மிகைச் செலவு மானியக் கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1971–72-ஆம் ஆண்டு மிகைச் செலவுமானியக் கோரிக்கைகளை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்:

துணைத் தலைவர் அவர்களே,

1971–72 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம்மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1975–76-ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1971–72-ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே 1971–72 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 7.63 கோடி ரூபாயாக இருக்கிறது. ஆண்டு இறுதியில் தீ விபத்தினாலும் வெள்ளத்தினாலும் ஏற்பட்ட எதிர்பாராச் செலவும், பேருந்து வழித்தடச் சாலை பராமரிப்புச் செலவும் உயர்ந்ததும், வேளாண்மை, மருத்துவம் என்ற தலைப்புகளின் கீழ் அதிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டதும், "பண்டகசாலை முன் பணம்" என்ற தலைப்பினகீழ் பொருட்களை வாங்குவதற்கு முன் பணங்கள் கொடுக்கப்பட்டதும் இவ்வகையில் பெரிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1971–72 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம்மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.